# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.519/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராக்கப்பன் | த–பெ | சுப்பையா |
| ஊர்: | : | அமராவதிபுதூர் | சமயம்: | |
| வயது: | : | 48/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

**எதிரி ஆஜர்**

----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் அமராவதிபுதூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 08.06.2016 அன்று நான் விவசாயத்திற்கு மருந்து வாங்குவதற்காக சென்றுவிட்டு என்னுடைய இருசக்கர வாகனத்தில் காரைக்கடிக்கு வந்து கொண்டிருந்தேன். இரவு 7.45 மணியளவில் ஐடிஐ அருகில் உள்ள பாலம் வழியாக வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த டாடாஎஸ் வாகனம் அதிவேகமாக சம்பவ சாலையில் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த இரண்டு நபர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. அதில் ஒரு நபருக்கு பின்னாந்தலையில் காயங்கள் ஏற்பட்டு பேசு மூச்சு இன்றி மயங்கிய நிலையில் இருந்தார். மற்றொரு நபருக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தது. அருகில் இருந்தவர்கள் கூடி விட்டார்கள். 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தேன். ஆம்புலன்ஸ் வந்த உடன் மேற்படி இரண்டு நபர்களையும் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் நான் உடன் செல்லவில்லை. நான் அந்த சமயத்தில் அமராவதி புதூர் பஞ்சாயத்து வார்டு கவுன்சிலராக இருந்தேன். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டதால் எதிரி எந்த ஊரை சார்ந்தவர் என்று எனக்கு தெரியவில்லை. சம்பவ நேரத்தில் விபத்தை ஏற்படுத்தி விட்டு எதியானவர் சென்று விட்டதால் அவரை என்னால் அடையாளம் காணவில்லை. போலீசார் விசாரணை செய்தார்கள். விபத்தில் காயம் பட்ட சின்னையா என்பவர் இறந்து விட்ட விபரம் தெரிய வந்தது.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்ததாக சொல்லும் நபர் எனது ஊர்க்காரரர் என்றால் சரிதான். நாகராசு என்பவரை சிறுவயதில் இருந்தே தெரியும். நாகராசு என்பவருக்கு மது அருந்தும் பழக்கும் உடையவர் என்றால் எனக்கு தெரியாது. விபத்தில் அடிபட்டு கிடந்த நபர்கள் வலது ஓரமாக இருந்தார்கள் என்றால் இல்லை நடுரோட்டில் இருந்தார்கள். இறந்த நபருக்கு இழப்பீடு கோருவதற்காக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. நான் இறந்த நபரின் வாகனத்தில் பின்னால் சென்றதாக கூறும் தூரத்தின் அளவு 100 அடி என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் காவல் துறையினர் கேட்டுகொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தங்களால் எவ்வாறு வாகனத்தின் எண்ணை எவ்வாறு சொல்லமுடியும் என்றால் நான் அருகாமையில் இருந்ததால் வண்டியின் எண்ணை நன்றாக கவனித்தேன் நன்றாக நியாபகம் உள்ளது. இரவு நேரத்தில் வண்டியின் எண்ணை கவனித்திருக்க முடியாது என்றால் சரியல்ல. விபத்தில் காயம் பட்ட நபருக்கும் இறந்த நபருக்கும் இழப்பீடு கோருவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.21 06:53:03 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி